# செப்டம்பர் – 13 – வியாழன்

## புனித கிறிசோஸ்ரம் அருளப்பர்

**"உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள்: உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள்"(லூாக்.6:27)**

## முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 8 : 1 – 7, 11 - 13

சகோதர சகோதரிகளே நம் அனைவருக்கும் அறிவு உண்டு. இது நமக்குத் தெரிந்ததே. இவ்வறிவு இறுமாப்படையச் செய்யும் ஆனால் அன்பு உறவை வளர்க்கும். தமக்கு ஏதோ அறிவு இருக்கிறது என்று நினைக்கிறவர் அறியவேண்டிய முறையில் எதையும் அறிந்து கொள்ளவில்லை. கடவுளிடம் அன்பு செலுத்துகிறவரைக் கடவுள் அறிவார். இப்போது சிலைகளுக்குப் படைக்கப்பட்டவற்றை உண்பதைக் குறித்துப் பார்ப்போம் "இவ்வுலகில் சிலை என்பது ஒன்றுமேயில்லை", "கடவுள் ஒருவரன்றி வேறு தெய்வங்கள் இல்லை" என்று நமக்குத் தெரியும். விண்ணிலும் மண்ணிலும் தெய்வங்கள் என்று சொல்லப்படுபவை பல இருக்கலாம் தெய்வங்கள் பலவும் ஆண்டவர்கள் பலரும் உளர். ஆனால் நமக்குக் கடவுள் ஒருவரே. அவரே நம் தந்தை. அவரிடமிருந்தே அனைத்தும் வருகின்றன. அவருக்காக நாம் இருக்கின்றோம். அவ்வாறே, நமக்கு ஆண்டவரும் ஒருவரே அவரே இயேசு கிறிஸ்து. அவர் வழியாகவே அனைத்தும் வருகின்றன் அவர் மூலமாகவே நாம்வாழ்கிறோம். ஆனால் இவ்வறிவு எல்லாரிடமும் இல்லை. இதுவரை சிலைகளை வழிபட்டுப் பழக்கப்பட்ட சிலர் அவற்றிற்குப் படைக்கப்பட்டவற்றைப் படையல் பொருள் என எண்ணி உண்கிறார்கள். அவர்களின் மனச்சான்று வலுவற்றதாயிருப்பதால் அது கறைப்படுகிறது. இவ்வாறு இந்த "அறிவு" வலுவற்றவரின் அழிவுக்குக் காரணமாகிறது. அவர் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் அல்லவா? அவருக்காகவும் கிறிஸ்து இறந்தார் அல்லவா? இவ்வாறு நீங்கள் வலுவற்ற மனச்சான்றைக் காயப்படுத்திச் சகோதரர் சகோதரிகளுக்கு எதிராகப் பாவம் செய்தால், அது கிறிஸ்துவுக்கே எதிரான பாவம் ஆகும். ஆகையால் என்சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நான் உண்ணும் உணவு ஒரு தடைக்கல்லாக இருக்குமானால், இறைச்சியை ஒருநாளும் உண்ணமாட்டேன். அவர் பாவத்தில் விழ நான் காரணமாய் இருக்கமாட்டேன்.

**பதில்பாடல் :** ஆண்டவரே என்றும் உள்ள வழியில் என்னை
நடத்தியருளும்.

## நற்செய்தி : லூக்கா 6 : 27 - 38

அக்காலத்தில் இயேசு சீடர்மீது தம் பார்வையைப் பதித்துக் கூறியவை "நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருக்கும் உங்களுக்குக் கூறுகிறேன். உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள் உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள். உங்களைச் சபிப்போருக்கு ஆசிகூறுங்கள் உங்களை இகழ்ந்து பேசுவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். உங்களை ஒரு கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள். உங்கள் மேலுடையை எடுத்துக் கொள்பவர் உங்கள் அங்கியையும் எடுத்துக்கொள்ளப் பார்த்தால் அவரைத் தடுக்காதீர்கள். உங்களிடம் கேட்கும் எவருக்கும் கொடுங்கள். உங்களுடைய பொருள்களை எடுத்துக் கொள்வோரிடமிருந்து அவற்றைத் திருப்பிக் கேட்காதீர்கள். "பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். உங்களிடம் அன்பு செலுத்து வோரிடமே நீங்கள் அன்பு செலுத்தினால் உங்களுக்கு வரும் நன்மை என்ன? பாவிகளும் தங்களிடம் அன்பு செலுத்துவோரிடம் அன்பு செலுத்துகிறார்களே. உங்களுக்கு நன்மை செய்பவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால் உங்களுக்கு வரும் நன்மை என்ன? பாவிகளும் அவ்வாறு செய்கிறார்களே. திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என எதிர்பார்த்து நீங்கள் கடன்கொடுத்தால் உங்களுக்குவரும் நன்மை என்ன? ஏனெனில், முழுவதையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்னும் நோக்குடன் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே. நீங்கள் உங்கள் பகைவரிடமும் அன்பு செலுத்துங்கள் அவர்களுக்கு நன்மை செய்யுங்கள் திரும்பக் கிடைக்கும் என எதிர்பார்க்காமல் கடன் கொடுங்கள். அப்போது உங்கள் கைம்மாறு மிகுதியாய் இருக்கும். நீங்கள் உன்னத கடவுளின் மக்களாய் இருப்பீர்கள். ஏனெனில் அவர் நன்றிகெட்டோருக்கும் பொல்லாதோருக்கும் நன்மை செய்கிறார். உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள். "பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதீர்கள் அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள். மற்றவர்களைக் கண்டனம் செய்யாதீர்கள் அப்போதுதான் நீங்களும் கண்டனத்துக்கு ஆளாக மாட்டீர்கள். மன்னியுங்கள் மன்னிப்புப் பெறுவீர்கள். கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்." என்றார்.

**தியானம்:** "கடவுள் நம்மை அன்பு செய்கிறார் எப்போதும் அன்பு செய்கிறார்" இது மாறாத உண்மை, இதனால் பரிவு, மன்னிப்பு. அரவணைப்பு போன்ற கடவுள் தன்மைகளை எப்போதும் எம்மீது வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார். பொதுவாக நாம் எல்லோரும் நிறைவு பெறவேண்டும், நம்முள் அமைதி பிறக்க வேண்டும் என்ற ஏக்கம் எமக்குண்டு. நிறைவுள்ளவர்களாய் இருப்பது குறையில்லாமலிருப்பது என்று பொருளில்லை மாறாக மனிதர்களாக பிறந்த நாங்கள் குறைவுள்ளவர்கள்தான். இந்த குறைகளை ஏற்றுக்கொள்ளும் போதுதான் நாம் நிறைவுள்ளவர்களாகிறோம். நாம் அன்பு, எதிர்நோக்கு, விசுவாசம் இவை மூன்றும் அல்லாது வாழும் பொழுது நம் வாழ்வு திசை மாறுகின்றது. இந்த உயரிய பண்புகள் நம்முள் உதிக்க உதவுவது பொறுமை, இன்று நம் மத்தியில் அதிகமாக சண்டை சச்சரவுகள், பகைமைகள், மனக்கசப்புக்கள் இருக்கின்றன என்றால் நம் மனதிலிருந்து பொறுமை மிகத் தொலைவில் சென்றுவிட்டது என்றுதான் அர்த்தம். ஆகவேதான் எல்லோரையும் குறை நிறைகளோடு ஏற்றுக்கொண்டு பகைவர்களையும் அன்பு செய்யும் பொழுது இறைத் தந்தையைப் போன்று நிறைவுள்ளவர்களாவோம். சிலுவையில் தம்மை அறைந்தவர்களையும் மன்னித்து மீட்பு அருளிய அந்த இறைமகனின் சீடர்களாவோம்.